EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 23

## எட்டுத்தொகை இலக்கியத்தில் அகப்புறக் கருத்துக்கள்

*வெ. சுதா , நெறியாளர் முனைவர் அ. கௌரன்*
*முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்),*
*தமிழ்த்துறை,*
*அரசு கலைக்கல்லூரி, தருமபுரி - 636 705. தமிழ்நாடு.*
*மின்னஞ்சல்:*sudharamani7688@gmail.com
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*அரசு கலைக்கல்லூரி, தருமபுரி – 636 705.*

### முன்னுரை

சங்க இலக்கியத்தில் அகமும் புறமும் பாடுபொருளாக அமைந்துள்ளன. சங்க அகப்பாடல்களில் அகவுலக அறங்களும், புறப்பாடல்களில் புறவுலக அறங்களும் பொதிந்துள்ளன. இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்தன என்பதை சங்கப்பாட்டும், தொகையும் தெளிவாகக் காட்டுகின்றன. புறவொழுக்கங்களை மேற்கொள்வதற்குரிய வரம்பாக அமைவது அரசியல், பண்டையத் தமிழரின் நாட்டு வாழ்வுக்கு சமூகம் இன்றியமையாதது என்பதை உணர்ந்திருந்தனர். அகவாழ்வின் செம்மையையும் புறவாழ்வின் மாண்பையும் கண்டறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**களவியலறம்**

இன்பமும் பொருளும் அறமும் செறிந்திட அன்பும் சேர்ந்து களவு தொடங்குகின்றது. அறவழிப்பட்ட களவு வாழ்க்கையை அக்காலமக்களால் ஏற்கப்பெற்றிருந்தது என்பதை,

**“யாவும் ஞாயும் யாரா கியரோ**

**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**

**யானும் நீயும் எவ்வழி அறிதும்**

**செம்புலப் பெயர்நீர் போல**

**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே”**[1]

என் தாயும் உன் தாயும் என்ன உறவுடையவர். என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையில் உறவினராவர். யானும் நீயும் இதற்கு முன் எந்த விதத்தில் அறிமுகமாகி இருந்தோம். இவை எதுவும் இல்லை. எதிர்பாராது சந்தித்தபோது நம் இருவரது அன்புடை நெஞ்சங்கள், செம்மண், நிலத்துப் பெய்த மழைநீர், அப்பொழுதே நிறமும் சுவையும் மாறி ஒன்றாகக் கலந்துவிடுவது போலத் தாம் ஒன்றுப்பட்டுக் கலந்தன. அதுபோல துணையின்றி வாழாத வாழாத தலைவனும் தலைவியும் இணைந்து வாழ்ந்தனர்.

**“இருநீர்ச் சேர்ப்பன நீப்பின் ஒருநம்**

**இன்னுயிர் அல்லது பிறிது ஒன்று**

**எவனோ தோழி நாம்இழப் பதுவே”**[2]

பெரிய கடற்கரைத் தலைவன் பிரிந்தால், நாம் இழக்கப்போவது, நமது ஒரே ஒரு இனிய உயிர் மட்டுமே அதுவல்லது நாம் இழப்பதற்கு வேறு ஒன்று இல்லை என்று குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளன.

**தோழி**

தலைவன், தலைவி நல்வாழ்வில் அன்புக்கொண்ட தோழி, உலகியல் அறிவும் சொல்லாற்றலும் மிக்கவள். தலைவனுக்கே அவ்வப்போது நன்னெறிகளை எடுத்துக்கூறி நன்னெறிப்படுத்துபவள் தோழியே. வாழ்க்கைக்கு உறுதுணையாகிய தோழி, இருக்கண்களையும் உயர்ந்த நட்பினள். ஒழுக்கத்தில் ஏற்படும் இழுக்கம் நீக்கி நிலைநிற்க உதவும்

ஊன்றுகோலாகும். அறிவுரை கூறி அறநெறிப்படுத்தும் வழிகாட்டியாகத் திகழ்கின்றாள்.

**கற்பறம்**

கற்பு என்பது இல்லத்தார்க்குரிய ஒரு கட்டுப்பாடாகும். இந்தக் கட்டுப்பாடே கற்பெனும் அறமாகும்.

> **“கடவுள் கற்பொடு குடிக்க விளக்கு**
>
> **புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்”**[3]

என்று தலைவனின் பண்பைப் பாராட்டி தோழி கூறுவதாக அமைந்துள்ளன.

> **“நன்றி சான்ற கற்பு”**[4]

என்ற நற்றிணை பாடல்கள் பலவாறாக இலக்கியங்களில் பாராட்டுகின்றன. கற்புடைய மகளிர் பிற தெய்வங்களைத் தொழுதல் இல்லை. கணவனையே தெய்வமாக மதித்து வந்தனர்.

> **“கற்பு இறை கொண்டகமழும் சுடர் நுதற்”**[5]

கற்புடைப் பெண்டிர் உலகம் மழையின்றி வறுமையுற்றவிடத்து மழையைப் பெய்விக்கும் ஆற்றல் வாய்ந்தவராகவும் விளங்கினார்கள்.

**தலைவனுக்குரிய கடமைகளும் பண்புகளும்**

தலைவன் புறத்தொழுக்கம் மேற்கொண்ட காதலையும் இல்லறக் கடமையை நினைத்தொழுகும் இயல்புடையவர்கள். மனையறம் காக்கும் மாண்புடன் வீடும் நாடும் நலம் பெறுதலைத் தலைவியும் உடன்விளங்கினாள். நாடுகாவற் பொருட்டு மன்னனை வாழ்த்தி, நாட்டில் பசி, பிணி நீங்கிக் களவில்லாது இல்வாழ்க்கை முறை செய்தலை வேண்டுகின்றாள். தலைமகனே இல்லறத்தின் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார். அறம்பிறழாத செயல்களை மேற்கொள்வான். தலைமகள் இல்லறத்தை நடத்துவதற்கான சில உரிமைகளை கொடுக்கின்றார்.

**அரசியற் பண்புகள்**

நாடு காத்தற்கும், பகையழித்தற்கும், முறை செய்தற்கும் உரிய பண்புகளைக் கொண்டு மன்னர் விளங்கினார். போற்றாரைப் பொறுத்தலில் நிலம் போன்றும். சூழ்ச்சி அகலத்தில் விசும்பு போன்றும், பகைவரை

அழித்தலில் தீப்போன்றும், அளி செய்வதில் நீர் போன்றும் இயற்கையை ஒத்தவன் என்று சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் போற்றப்பெற்றார்.

**"மண் திணிந்த நிலனும்**

**நிலன் ஏந்திய விசும்பும்**

**விசும்பு தைவரு வளியும்**

**வளித் தலைஇய தீயும்**

**தீ முரணிய நீரும், என்றாங்கு**

**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல**

**போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்**

**வலியும். தெறலும், அளியும் உடையோய்"**[6]

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

**மன்னர் அறம்**

சங்ககால மக்கள் தனி அதிகாரம் படைத்தவர்கள் ஆயினும் அவர்கள் குடிகளின் குறையற்ற வாழ்வே தங்களுடைய நல்வாழ்வென நம்பினர். நாட்டிலே செல்வம் செழிக்க உணவுப் பொருள்கள் ஏராளமாக உற்பத்தியாக குடிமக்களுடன் ஒத்துழைப்பதே தங்கள் முதற்கடமையெனக் கொண்டிருந்தனர். மன்னர் மக்களின் உயிராக விளங்கினர். இதுவே மன்னர்க்குரிய அறமாக புறநானூற்றுப்பாடல் ஒன்று விளக்கியுள்ளன.

**"நெல்லும் உயிர் அன்றேளு நீரும் உயிர் அன்றே**

**மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம்"**[7]

மேலும், மற்றொரு பாடல் ஒன்றில்,

**"மழை தொழில் உதவ, மாதிரம் கொழுக்கத்**

**தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய**

**நிலனும் மரனும் பயன் எதிர்பு நந்த**

**நோயிகந்து நோக்கு விளங்க"**[8]

வற்றாமல் வானமழை பொழிந்தது. உழவுத்தொழில் ஓங்கி வளர்ந்தது. எல்லாத் திசைகளும் செழித்திருந்தன. விதைத்த ஒரே விதையிலே ஆயிரக்கணக்கான தானியங்கள் விளைந்தன. விளைநிலங்களும் மரங்களும் ஏராளமான பயனைத் தந்து சிறந்துள்ளன. மக்கள் பசியும் நோயும் இல்லாமல் அழகுடன் மகிழ்ந்து வாழ்ந்தனர்.

## முடிவுரை

சங்க நூல்கள் எல்லாம் இல்லற வாழ்க்கையைத்தான் ஏற்றமுடையதாகக் கூறுகின்றன. அகப்பொருள் பற்றிக் கூறும் நூல்கள் அனைத்தும் இல்லறத்தைப் பற்றிக் கூறுகின்றன. புறப்பொருள் சார்ந்த செய்திகளாக நாட்டில் நல்ல அமைதியும் அரசியலும், போர்களும் இருந்தால்தான் ஒவ்வொரு குடும்பமும் நன்றாக வாழமுடியும் என்பது அகப்புறக் கருத்தாக இக்கட்டுரையில் அறியமுடிகிறது.

## தொகுப்புரை

- சங்க இலக்கியத்தில் அகப்புறக் கருத்துக்களாக அரசியல், பண்டையத் தமிழரின் அகவாழ்வின் செம்மையையும், புறவாழ்வின் மாண்பையும் கண்டறிவதாகும்.

- தலைவன், தலைவி இடையே நிகழும் களவு, கற்பு, தலைவனுக்குரிய கடமைகளும், பண்புகளும் விளக்கப்படுகின்றது.

- நாட்டில் பசி, பிணி நீங்கிக் களவில்லாது இல்வாழ்க்கைமுறை செய்தலை இக்கட்டுரை மூலம் ஆராயப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. தமிழண்ணல், செம்புலப்பெயனீரார் - குறுந்தொகை, கோவிலூர் மடாலயம், கோவிலூர்-630307 முதல்பதிப்பு – 2002, பா.எண்.40, பா.வரி.1,5. பக்.எண்.70.
2. ந.மீனவன், இளம்பூதனார் - அகநானூறு, கோவிலூர் மடாலயம், கோவிலூர்-630307, முதல்பதிப்பு-2004. பா.334, பா.வரி.4,6., பக்.எண்.334.
3. அ.ஆலிஸ், மருதன் இளநாகனார் - பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-600 098, முதல்பதிப்பு-2004. பா.எண்.184, பா.வரி.1,2. பக்.எண்.1.
4. கு.வெ. பாலசுப்பிரமணியம், ஆலங்குடி வங்கனார் - புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-600 098, முதல்பதிப்பு-2004. பா.எண்.330, பா.வரி.10., பக்.எண்.334.
5. அ.ப.பாலையன், நற்றிணை, சாரதா பதிப்பகம், சென்னை-600 014. முதல்பதிப்பு-2009. பா.எண்.7, பா.வரி.15, ப.எண்.244.

6. அ. மாணிக்கனார், முரஞ்சியூர் முடிநாகராயர் - பத்துப்பாட்டு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 600 017. முதல் பதிப்பு–1999. பா.எண்.2, பா.வரி.1,8, பக்.எண்.3.
7. மோசிகீரனார்,புறநானூறு. பா.எண்.186, பா.வரி.1,2, பக்.எண்.452.
8. மாங்குடி மருதனார், மதுரைகாஞ்சி. பா.வரி.10-13, பக்.5.